# ஆவின்

**சேலம் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள்**
**ஒன்றியம் லிட், தளவாய்ப்பட்டி அஞ்சல்,**
**சேலம் – 636 302.**

## ஒப்பந்தப் பணி படிவம்

**தொழில் நுட்ப படிவம் 'அ'**

சேலம் பால்பண்ணையில் உள்ள தண்ணீர் சுத்தகரிப்பு நிலையத்தின் இயக்கம், பாரமரிப்பு மற்றும் தண்ணீர் விநியோகம் செய்வதற்கான பணிகளை இரண்டு வருடத்திற்கு மேற்கொள்வதற்கான ஒப்பந்தப் பணி.

## ஒப்பந்த நாள்

## 12–07–2022

# <u>சேலம் பால்பண்ணை</u>

சேலம் பால்பண்ணையில் உள்ள தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்தின் இயக்கம், பராமரிப்பு மற்றும் தண்ணீர் விநியோகம் செய்வதற்கான பணிகளை இரண்டு வருடத்திற்கு மேற்கொள்வதற்கான ஒப்பந்தப் பணி

## ***ஒப்பந்த நிபந்தனைகள்***

| | |
|---|---|
| 1. | விண்ணபத்தில் கோரியுள்ள அனைத்து விபரங்களும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். |
| 2. | டெண்டர்தாரர் தொழிற்சாலைகளின் சட்ட திட்டங்களின்படி தங்கள் நிறுவனத்தை பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். பதிவு செய்யப்பட்டதற்கான பதிவுச் சான்றிதழ் நகலினை ஒப்பந்த (தொழில் நுட்ப விபர பகுதி – ‘அ’) படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். தவறும்பட்சத்தில் தங்களின் ஒப்பந்தப் படிவம் எவ்வித முன்னறிவிப்புமின்றி நேரடியாக <u>நிராகரிக்கப்படும்.</u> |
| 3. | ஒப்பந்தப் பணி ஆணை கிடைக்கப் பெற்ற ஒரு மாத காலத்திற்குள் தொழிற்சாலைகளின் சட்ட திட்டங்களின்படி டெண்டர்தாரர் பதிவு செய்யப்பட்ட உரிமத்தைப் பெற்று அதன் நகலை நிர்வாகத்திற்கு தெரிவிக்க வேண்டும். |
| 4. | ஒப்பந்ததாரர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தில் தனது பணியாளருக்காக தனியே கணக்கு எண் பெற்று அரசு நிபந்தனைகளுக்கு உட்பட்டு பங்குத் தொகை (EPF) செலுத்தி வர வேண்டும். ஒப்பந்ததாரரின் வருங்கால வைப்பு நிதி சான்றிதழ் ஒப்பந்தப்படிவத்துடன் இணைக்கப்பட வேண்டும். |
| 5. | ஒப்பந்ததாரர் தொழிலாளர் மாநில ஈட்டுறுதி கழகத்தில் (ESI) தனது பணியாளர்களுக்கு மருத்துவ வசதி பெறும் உறுப்பினராக பதிவு செய்திருக்க வேண்டும். ஒப்பந்ததாரரின் தொழிலாளர் மாநில ஈட்டுறுதி சான்றிதழ் ஒப்பந்தப்படிவத்துடன் இணைக்கப்பட வேண்டும். |
| 6. | டெண்டர்தாரர் சரக்கு மற்றும் சேவை (GST) வரிக்கான பதிவு எண் ஒப்பந்தப்படிவத்துடன் இணைக்கப்பட வேண்டும். முந்தைய மூன்று வருடத்திற்கான வருமான வரி தாக்கல் செய்யப்பட்ட விபரமும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். வருமான வரி சட்டப்படி GST/ TDS (Tax deducted at source) நடப்பு நிலவரப்படி பிடித்தம் செய்யப்படும். |
| 7. | ஒப்பந்ததாரர் சரக்கு மற்றும் சேவை (GST) போன்ற சட்டபூர்வமான அரசுக்கு செலுத்த வேண்டிய அனைத்து வரிகளையும் தனது சொந்த பொறுப்பில் செலுத்தி அதன் விவரத்தினை தெரிவிக்க வேண்டும். மேலும் இதற்கான சட்டபூர்வமான பதிவேடுகளையும் பராமரித்து வரவேண்டும். |

டெண்டர்தாரர் கையொப்பம்

| | |
|---|---|
| 8. | ஒப்பந்த படிவத்தில் கோரியுள்ள சான்றுகள், படிவங்கள் போன்ற அனைத்தையும் ஒப்பந்தப் படிவத்துடன் இணைக்கப் பட்டிருக்க வேண்டும். |
| 9. | ஒப்பந்ததாரர் குறைந்தபட்சம் பத்து எண்ணிக்கையில் Softener plant மற்றும் Demineralizer Plant நிறுவி இருக்க வேண்டும். Softener plant, Demineralizer Plant இயக்கம் மற்றும் பாரமரிப்பு செய்வதில் ஐந்து வருட முன்அனுபவம் பெற்று இருக்க வேண்டும். இதற்கான அனுபவச் சான்றிதழ் நகலை ஒப்பந்த (தொழில் நுட்ப விபர பகுதி – 'அ') படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். தவறும்பட்சத்தில் தங்களின் ஒப்பந்தப் படிவம் எவ்வித முன்னறிவிப்புமின்றி நேரடியாக நிராகரிக்கப்படும். |
| 10. | ஒப்பந்ததாரர் ஒப்பந்த பணியாளர்கள் அனைவருக்கும் மொத்தமாக தங்களது நிறுவனம் மூலம் குரூப் இன்சுரன்ஸ் செய்து கொள்ள வேண்டும். ஒப்பந்ததாரர் ஒப்பந்தம் செய்யப்படும் பணியாளர்களுக்கு காவல்துறையினரிடம் சரிபார்ப்பு சான்றிதழ் ஒப்பந்தம் கிடைக்கப்பெற்றவுடன் பெற்று வழங்கவேண்டும். |
| 11. | ஒப்பந்ததாரர் ஒப்பந்தம் செய்யப்படும் பணியாளர்களுக்கு பணி நேரத்தில் எதிர்பாராத விபத்துக்கள் அல்லது இழப்பு ஏற்பட்டால் தங்களது நிறுவனம் தான் பொறுப்பு ஏற்க வேண்டும். ஆவின் நிறுவனம் எந்த விதத்திலும் பொறுப்பு ஏற்காது. |
| 12. | ஒப்பந்ததாரர் ஒப்பந்தம் செய்யப்படும் பணியாளர்கள் விவரங்கள் அடங்கிய பட்டியல் (மருத்துவர் உடல் பரிசோதனைச் சான்றிதழ் மற்றும் பிறந்த தேதி ஆதாரச் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) மற்றும் அவர்களின் புகைப்படம் அடங்கிய படடியல் ஒரு நகல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். (ஒப்பந்த உத்திரவு பெற்ற ஒரு மாத காலத்திற்குள் ஒப்படைக்கப்பட வேண்டும்) அலுவகத்தில் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் மட்டுமே பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும். |
| 13. | ஒப்பந்த பணியாளர்களுக்கு அடையாள அட்டை மற்றும் சீருடை தங்களது நிறுவனம் மூலம் வழங்கப்பட வேண்டும். |
| 14. | மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறையிலுள்ள ஊதிய சுற்றறிக்கையின்படியும் மற்றும் குறைந்தபட்ச கூலி அரசாணைபடியும் ஒப்பந்த பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும். மேற்குறிப்பிட்டபடி மாவட்ட ஆட்சித்தலைவர் ஊதிய சுற்றறிக்கையின்படி அதிகபட்ச கூலியைவிட மிகாமலும், குறைந்தபட்ச கூலி அரசாணையின்படி குறையாமலும் விலைப்புள்ளி இருக்க வேண்டும். இல்லையென்றால் தங்களுடைய ஒப்பந்தப்படிவம் நிராகரிக்கப்படும். |

டெண்டர்தாரர் கையொப்பம்

| | |
|---|---|
| 15. | ஒப்பந்த பணிகளுக்குரிய பணப் பட்டியல்களை மூன்று நகல்கள் (சுய சான்று ஒப்பமிட்ட\ வருங்கால வைப்புநிதி பங்கு மற்றும் இ.எஸ்.ஐ. நிறுவனப் பங்கு ஆகியவைகளை செலுத்திய நகல்கள், பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கியதற்கான பட்டியல் நகல், அதற்கு செலுத்த வேண்டிய வரி GST Etc போன்றவற்றை செலுத்திய பிறகுதான் சம்மந்தப்பட்ட பிரிவு அலுவலர்களின் சான்றிதழ்கள் மற்றும் வருகைப்பதிவேட்டினை நகல்கள் ஆகியவைகளுடன்) சமர்ப்பித்து பணப்பட்டியல் தொகை கோர வேண்டும். ஒப்பந்ததாரர் தனது பணியாளர்களுக்கு ஊதியத்தினை பிரதி மாதம் 7–ம் தேதிக்குள் வழங்கி அதன் விவரத்தினை ஒன்றியத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். அது தொடர்பான சட்டபூர்வமான பதிவேடுகளை தவறாமல் பராமரித்து அவ்வப்போது பரிசீலனைக்கு ஒன்றியத்திலும் மற்ற சட்டபூர்வ ஆய்வின் போதும் சமர்ப்பிக்க வேண்டும். எத்தருணத்திலும் ஊதியம் வழங்கப்படவில்லை என தெரிய வருமாயின் இவ்வூதியத்தை ஒப்பந்ததாரின் பிணையத் தொகை மற்றும் பணப் பட்டியலிருந்து பிடித்தம் செய்து இதனை ஒன்றியத்தால் சம்மந்தப்பட்ட பணியாளருக்கு வழங்கப்படும். மேலும் ஒப்பந்தத்தை எந்தவித முன்னறிவிப்பும் இன்றி உடனடியாக இரத்து செய்யவும் பொது மேலாளருக்கு அதிகாரம் உண்டு. |
| 16. | ஒப்பந்த பணியாளர்களின் வயது வரம்பு 20 முதல் 45 வரை மட்டுமே இருக்க வேண்டும். மேலும் எவ்வித தொற்று நோயாலும் பாதிக்கப்படாதவர்களை மட்டுமே பணிக்கு அனுப்ப வேண்டும். |
| 17. | ஒப்பந்த பணியாளர்கள் கண்டிப்பாக பீடி, சிகரெட் இதர லாகிரி வஸ்துகள் பணி நேரத்தில் உபயோகிக்கக்கூடாது. மது அருந்திவிட்டு பணிக்கு வரக்கூடாது. அவ்வாறு மது அருந்தியது தெரிய வந்தால் சம்மந்தப்பட்ட பணியாளர் பணியிலிருந்து அப்புறப்படுத்தப்படுவார். அத்துடன் அதற்கான அபராதம் விதித்து பணப்பட்டியலில் இருந்து பிடித்தம் செய்யப்படும். |
| 18. | பணியின்போது ஆண் பணியாளர்கள் கண்டிப்பாக பேண்ட் மற்றும் சட்டை மட்டுமே அணிய வேண்டும். தவறும்பட்சத்தில் ஒன்றிய நிர்வாகம் எடுக்கும் முடிவுக்கு ஒப்பந்ததாரர் கட்டுப்பட வேண்டும். |
| 19. | டெண்டர் படிவங்கள் ‘‘அ’’ பகுதி மற்றும் ‘‘ஆ’’ பகுதி ஆகிய இரண்டு பகுதிகளையும் தனித்தனியாக இரண்டு கவருக்குள் வைத்து மூடி முத்திரையிட்டு ஒரு கவரின் மேல் ‘‘அ’’ பகுதி – தொழில் நுட்ப விபர பகுதி (Technical bid) என்றும், மற்றொரு கவரின் மேல் ‘‘ஆ’’ பகுதி – விலை விவர பகுதி (Commercial bid)என்றும் குறிப்பிட்டு மேற்கண்ட இரு கவர்களையும் சேர்த்து ஒரு பெரிய கவருக்குள் வைத்து மூடி முத்திரையிட்டு கவரின் மேல் எந்த பணிக்கான டெண்டர் என குறிப்பிட வேண்டும். தவறும்பட்சத்தில் தங்களின் ஒப்பந்தப் படிவம் எவ்வித முன்னறிவிப்புமின்றி நேரடியாக <u>நிராகரிக்கப்படும்.</u> |

டெண்டர்தாரர் கையொப்பம்

| | |
|---|---|
| **20.** | டெண்டர் இரண்டு பகுதி முறையில் நடைபெறுவதால், ''அ'' பகுதி– தொழில் நுட்ப விபர பகுதி (Technical bid) – கவரில் ஒன்றியம் கோரும் ஆவணங்கள் மற்றும் தகுதிகள் அனைத்தையும் ஒன்றியத்தால் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இருந்தால் மட்டுமே அதன் அடிப்படையில் தேறிய ஒப்பந்ததாரர்களின் ''ஆ'' பகுதி – விலை விவர பகுதி (Commercial bid) – கவர்கள் மட்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். தகுதி பெற்ற ஒப்பந்த படிவங்களின் விலை விபர பகுதி (பகுதி– ''ஆ'') 12.7.2022 அன்றோ அல்லது வேறு தேதியை முடிவு செய்த பின்னரோ திறக்கப்படும்.<br><br>மேற்படி விலை விபர பகுதியில் (பகுதி– ''ஆ'') ஒப்பந்தாரர்கள் குறிப்பிடும் கூலி விபரங்களின் செல்லுபடியாகும் காலம் (Validity Period of the Quoted wage) குறைந்தது 90 நாட்களுக்கு இருக்க வேண்டும். |
| **21.** | டேவணித் தொகையை (EMD) General Manager, SDCMPU Ltd, Salem, என்னும் பெயரில் கேட்பு வரைவோலையாக விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். தங்களின் பெயரில் இவ்வொன்றியத்தில் ஏதேனும் பழைய டேவணித்தொகை நிலுவையிலிருந்தால், அந்த நிலுவைத் தொகையை இவ்வொப்பந்த டேவணித் தொகைக்காக கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. மேலும் ஒப்பந்தப் படிவங்களில் அனைத்துப் பக்கங்களிலும் கையொப்பமிடவேண்டும்.<br><br>டேவணித் தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு கோரும் நிறுவனங்கள் அதற்கான தகுந்த/ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆவணங்களின் நகல்களை இவ்வொப்பந்தப் படிவங்களுடன் இணைத்திருந்தால் இத்தொகை செலுத்துவதிலிருந்து அரசு விதிகளுக்கு உட்பட்டு விலக்கு அளிக்கப்படும்.<br><br>மேற்படி டேவணித் தொகையோ (அ) விலக்கு கோருவதற்கான ஆவணங்களோ இல்லாத பட்சத்தில் தங்களின் ஒப்பந்தப்படிவம் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நேரடியாக **நிராகரிக்கப்படும்.** |

டெண்டர்தாரர் கையொப்பம்

| | |
|---|---|
| 22. | செலுத்தப்பட வேண்டிய டேவணித் / பிணையத்தொகைகள் |

| வ. எண் | ஒப்பந்தப்பணியின் விபரம் | டேவணித் தொகை (EMD) | பிணையத்தொகை (S.D.) |
|---|---|---|---|
| 1. | சேலம் பால்பண்ணையில் உள்ள தண்ணீர் சுத்தகரிப்பு நிலையத்தின் இயக்கம், பாரமரிப்பு மற்றும் தண்ணீர் விநியோகம் செய்வதற்கான பணிகளை மேற்கொள்வது. | Rs. 40,000/- | ஒப்பந்தப்பணி ஆணை மொத்த மதிப்பீட்டில் 5% செலுத்த வேண்டும். (24 மாதங்களுக்கு) |

டெண்டரில் தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் மேற்படி பிணையத் தொகையை பணி ஆணை கிடைக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும்.

மேற்படி தொகைகளுக்கு எந்தவித வட்டியும் வழங்கப்பட மாட்டாது. இத்தொகை செலுத்தியதற்கான ரசீது நகலை முதன் முதலாக பணப்பட்டியல் கோரும்போது கண்டிப்பாக இணைத்து அனுப்ப வேண்டும். இல்லையேல் பணப்பட்டியலின் மீது எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. ஒப்பந்ததாரரால் செலுத்தப்பட வேண்டிய நஷ்டம் / இழப்புத் போன்ற தொகைகளை இந்த பிணையத் தொகையிலிருந்து பிடித்தம் செய்து கொள்ள ஒன்றியத்திற்கு முழு உரிமை உள்ளது. மேலும் இத்தொகையினை சம்மந்தப்பட்ட ஆண்டுகளின் சட்டப்பூர்வமான தணிக்கை அறிக்கை பெற்றவுடன் திரும்ப வழங்கப்படும்.

| | |
|---|---|
| 23. | ஒப்பந்த காலம் ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்ட நாள் முதல் 24 மாத காலத்திற்கு அமலில் இருக்கும். |
| 24. | மேற்படி ஒப்பந்த காலத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு அல்லது புதிய ஒப்பந்தப் பணி ஆணை வழங்கும் காலம் வரை இதில் எது முந்தியோ அதுவரையிலும் நீட்டிக்கலாம். இதற்கு ஒப்பந்தாரர் கட்டுப்பட்டு மேற்படி ஒப்பந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். |
| 25. | குறிப்பிட்ட காலக்கெடுவுக்கு பின் (அதாவது) **12.07.2022** பிற்பகல் **02.30** மணிக்கு மேல்) ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. அஞ்சல் வழியில் ஏற்படும் காலதாமத்திற்கு ஒன்றியம் பொறுப்பேற்காது. மேலும் காலதாமதமாக பெறப்படும் டெண்டர் படிவங்களை எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நேரடியாக <u>நிராகரிக்கப்படும்.</u> |
| 26. | சட்டப் பூர்வமான அனைத்து வரிகளையும் ஒப்பந்ததாரரே தனது சொந்த பொறுப்பில் / தொகையிலிருந்து செலுத்தி வரவேண்டும். இதற்காக ஒன்றியம் எவ்வித தொகையையும் தங்களுக்கு வழங்காது. |

டெண்டர்தாரர் கையொப்பம்

| | |
|---|---|
| 27. | தொழிற்சாலைகள் ஆய்வாளர், தொழிலாளர்கள் ஆய்வாளர், வருங்கால வைப்பு நிதி அதிகாரிகள், தணிக்கை அதிகாரிகள், வருமான அதிகாரிகள் போன்ற அரசு உயர் அதிகாரிகள் அவ்வப்போது ஆய்வுக்கு கோரும் சட்டப்பூர்வமான பதிவேடுகளை பராமரித்து அவர்கள் கேட்கும்போது ஒப்பந்ததாரர்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் மேலும் அரசு அவ்வப்போது அறிவிக்கும் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு அதன்படி மேற்காணும் ஒப்பந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் |
| 28. | 05.07.2022 அன்று நடைபெற உள்ள கலந்துரை ஆய்வின் கூட்டத்தின் தீர்மானத்தை தமிழக அரசின் இணைய தளம் www.tenders.tn.gov.in –ல் இருந்து பதிவிறக்கம் செய்து அதனையும் ஒப்பந்த படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| 29. | டெண்டரில் தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் ஒப்பந்த விதிகளை ஏற்று ரூ.100/– மதிப்பிற்கு குறையாத முத்திரைத் தாளில் ஒன்றியத்துடன் ஒப்பந்தம் செய்து கொடுக்க வேண்டும். மேலும் ஒப்பந்த ஆணை கிடைக்கப் பெற்ற 30 நாளில் ரூ.10/–ஐ ஒன்றியத்தில் செலுத்தி அசோசியேட் உறுப்பினராக பதிவு செய்து கொள்ள வேண்டும் |
| 30. | மேலும் இவ்வொப்பந்தத்தின் அடிப்படையில் வழங்கப்படும் பணி ஆணையின்பேரில், இவ்வொன்றியத்தில் எவ்வித நிரந்தர பணி ஆணையும் கோர உரிமை இல்லை. |
| 31. | சட்ட ரீதியான நடவடிக்கைகள் அனைத்தும் Deputy Registrar (Dairying), Salem சேலம் மாநகர எல்லைக்குட்பட்டதாகும். |
| 32. | ஒப்பந்தம் திறக்கப்படும் நாளான 12–07–2022 அன்று அரசு விடுமுறை தினமாக அறிவிக்கும் பட்சத்தில் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் பகுதி – 1 முன் தகுதி படிவம் (Technical Bid) திறக்கப்படும். |
| 33. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் பணியாளர்கள் குறிப்பிட்ட அளவில் பணிக்கு வர தவறும் நாட்களில் அவர்களுக்கு பதிலாக வேறு குறிப்பிட்ட தகுதியுள்ள பணியாளர்களை பணிக்கு அமர்த்திக் கொள்ள ஒன்றியத்திற்கு உரிமையுண்டு. அதற்கான கூலியை அன்றைய நிலவரப்படி ஒப்பந்ததாரர் அப்பணியாளர்களுக்கு உடனே வழங்க வேண்டும். தவறும்பட்சத்தில் மேற்படி கூலியை ஒன்றியம் நிர்ணயிக்கும் அபராதத் தொகையுடன் ஒப்பந்ததாரரின் பணப்பட்டியலில் இருந்து பிடித்தம் செய்து மேற்படி பணியாளர்களுக்கு வழங்க ஒன்றியத்திற்கு உரிமையுண்டு. |
| 34. | ஒப்பந்த காலத்தில் ஆவின் நிறுவனம் மூலமாக நிரந்திர பணியாளர்கள் அல்லது தற்காலிக பணியாளர்கள் பணியமர்த்தும் பொழுது ஒப்பந்தத்தை ரத்து செய்ய பொது மேலாளருக்கு அதிகாரம் உண்டு. |

டெண்டர்தாரர் கையொப்பம்

| | |
|---|---|
| **35.** | ஒப்பந்தப் புள்ளிகளை முழுமையாக ஏற்கவோ, தள்ளிவைக்கவோ அல்லது இரத்து செய்யவோ பொது மேலாளர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு. மேலும் ஒப்பந்த நிபந்தனைகளில் ஏதெனும் பிரச்சனைகள் எழுந்தால், சேலம் பால்பண்ணையின் பொது மேலாளர் அவர்களின் முடிவே இறுதியானது. மேலும் வழங்கப்பட்ட ஒப்பந்தத்தை எவ்வித காரணமும் இல்லாமல் இரத்து செய்யவும் ஒன்றிய பொது மேலாளர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு. |
| **36.** | ஒப்பந்ததாரர் தங்கள் நிறுவனத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களுக்கு EPF no., UAN no.. மற்றும் ESI Insurance no. குறிப்பிட்டு அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும். |

இடம் –

நாள் – டெண்டர்தாரர் கையொப்பம்

பொது மேலாளர்

<u>சேலம் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள்</u>
<u>ஒன்றியம் லிட், தளவாய்ப்பட்டி அஞ்சல்,</u>
<u>சேலம் – 636 302.</u>

சேலம் பால்பண்ணையில் உள்ள தண்ணீர் சுத்தகரிப்பு நிலையத்தின் இயக்கம், பாரமரிப்பு மற்றும் தண்ணீர் விநியோகம் செய்வதற்கான பணிகளை இரண்டு வருடத்திற்கு மேற்கொள்வதற்கான ஒப்பந்தப் பணி

## <u>*ஒப்பந்த* பணிகளுக்கான *நிபந்தனைகள்*</u>

1. சேலம் பால்பண்ணையில் உள்ள தண்ணீர் சுத்திகரிப்பு பிரிவில் Softner plant, Demineralizer plant மற்றும் R.O plant களை இயக்கம், பராமரிப்பு மற்றும் தண்ணீர் விநியோக பணிகளை (Incomming water treatment and supply of treated water to all dairy plant round the clock in three shifts and water treatment plant day to day maintenance work) எவ்வித தொய்வும் இன்றி மேற்கொள்வதற்கு அனைத்து நாட்களிலும் (365 நாட்கள்) மூன்று கட்ட பணிகளுக்கு (6-2), (2-10) & (10-6) குறைந்தபட்சம் ITI கல்வித்தகுதி (அல்லது) அதற்கு மேல் கல்வித்தகுதி பெற்ற (Any Degree / Any Diploma) தகுதி பெற்ற டெக்னீசியன் (Technician) ஒருவர் வீதம் மூன்று கட்ட பணிகளுக்கு மூன்று டெக்னீசியன்களும் (Technicians), பொது பணியில் பணிபுரிய ஒரு டெக்னீசியன் மற்றும் ஒரு மேற்பார்வையாளரும் பணி அமர்த்தப்பட வேண்டும்.

2. தினசரி மேற்குறிப்பிட்ட தகுதிகள் உடைய 5 பணியாளர்கள் பணியில் இருக்க வேண்டும். இதில் எவருக்கேனும் வாரவிடுப்பு அல்லது இதர விடுப்புகள் அளிக்கும் பட்சத்தில் அவருக்கு பதில் வேறு ஒரு தகுதியுடைய பணியாளரை பணியில் அமர்த்த வேண்டும். ஆக தண்ணீர் பிரிவில் தினசரி 5 பணியாளர்கள் பணியில் இருக்க வேண்டும். தவறும் பட்சத்தில் தங்களது மாதாந்திர பணப்பட்டியலில் பணி ஆணை வழங்கிய அடிப்படை விலையை அந்த மாதத்தின் மொத்த நாட்களால் வகுத்து அதில் வரும் தொகையினை அந்த மாதத்தில் குறைவாக வழங்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கையால் பெருக்கி அதில் வரும் தொகையை மொத்த பில் தொகையில் பிடித்தம் செய்து மீதியுள்ள தொகை வழங்கப்படும்.

டெண்டர்தாரர் கையொப்பம்

3. மேற்குறிப்பிட்ட பணியாளர்களில் யாராவது ஏதாவது சூழ்நிலை காரணமாக பணிக்கு வருவதை நிறுத்தி கொண்டாலோ அல்லது தொடர் விடுப்பில் செல்வதாக இருந்தாலோ அவருக்கு பதிலாக உடனடியாக மாற்று பணியாளரை நியமித்து தண்ணீர் பிரிவில் பணிகள் தொய்வின்றி நடக்க தேவையான மேற்கூறிய நடவடிக்கைகள் எடுப்பது ஒப்பந்ததாரரின் பொறுப்பாகும்.

4. Shift Technician ஒவ்வொரு கட்ட பணி நேரத்திலும் கீழ்நிலை தொட்டி ஆழ்துளை கிணறு மற்றும் தரை கிணற்றிலிருந்து தண்ணீரை, தண்ணீர் சுத்திக்கரிப்பு நிலையத்திற்கும் மற்றும் மேல்நிலை தொட்டிகளுக்கும் ஏற்ற வேண்டும். தண்ணீரின் அளவு எப்பொழுதும் மேல்நிலை தொட்டிகளில் பாதிக்கு மேல் இருப்பு உள்ளவாறு பார்த்து கொள்ளப்பட வேண்டும். மேல்நிலை தொட்டிகளிலோ அல்லது கீழ்நிலை தொட்டிகளிலோ தண்ணீர் இல்லாமல் போகும் பொழுது அதனால் ஏற்படும் உற்பத்தி இழப்புக்கு ஈடான தொகையை ஒப்பந்தாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

5. சுத்திக்கரிக்கப்பட்ட தண்ணீரின் தரம் கீழ்க்கண்டவாறு இருக்க வேண்டும்.

| Soft water (மென்மையான தண்ணீர்) | Demineralizer water |
|---|---|
| கடினதன்மை (Hardness) = 4 ppm | கடினதன்மை (Hardness) = Zero ppm |
| | Total Dissolved solids - <5ppm |
| | Conductivity <30 ms/cm |
| | Chloride - Nil |
| | pH = 7.5 - 9.5 |
| | Silica = <0.5ppm |

6. Softener plant மற்றும் Demineralizer Plant-களின் அனைத்து அளவுருக்கள் (Parameter) அதற்குண்டான தரநிலையில் சரியாக பாரமரிக்கப்பட வேண்டும்.

7. அனைத்து தண்ணீர் இயந்திரங்களை இயக்குவதற்கு தேவையான அனைத்து இரசாயன பொருள்களும் ஒன்றியத்தை சார்ந்தவை.

8. Back washing & filters, Regeneration of softener and Demineralizer water plant-க்கு தேவையான அனைத்து தினசரி பராமரிப்பு பணிகள் மற்றும் அதற்கு தேவையான அழுத்தமானி, Strainer, Gasket-கள் போன்றவைகள் மட்டும் ஒப்பந்ததாரரை சார்ந்தது.

டெண்டர்தாரர் கையொப்பம்

9. Softener water plant, Demineralizer water Plant மற்றும் R.O Plant-க்கு தேவையான அனைத்து பாரமரிப்பு பணிகளும் ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கு தேவையான உதிரிபாகங்கள் ஒன்றியத்தின் மூலம் வழங்கப்படும்.

10. ஒப்பந்ததாரர் Softener water plant, Demineralizer water Plant, கீழ்நிலைத்தொட்டி, கிணறு மற்றும் ஆழ்துளை கிணறுகளின் சுற்றுப்புறம் மற்றும் இயந்திரங்களை தூய்மையாக வைத்து கொள்ள வேண்டும். மற்றும் கீழ்நிலை தொட்டி இரண்டும் (under ground sump), மேல்நிலை தொட்டி மூன்றும் மற்றும் DM Water storage tank (1), Soft water storage tank (1) ஆகிய அனைத்தையும் நான்கு மாத காலத்திற்கு ஒரு முறை சுத்தம் செய்யப்பட வேண்டும். இதற்குரிய முறையான பதிவேடுகள் பராமரிக்கப்பட வேண்டும்.

11. ஒப்பந்ததாரர் தண்ணீர் பைப் லைன்களில் எதிர்பாராமல் உடைப்புகள் ஏற்பட்டு தண்ணீர் கசிவு ஏற்பட்டால் உடனுக்குடன் பாரமரிப்பு பணிகளை மேற்கொண்டு பைப் லைன்களை சரி செய்து தண்ணீர் வீணாவதை தடுக்கவேண்டும் மற்றும் பைப் லைன்களில் தண்ணீர் கசிவுகள் இன்றி பாரமரிக்க வேண்டும்.

12. Softner Plant மற்றும் Demenaralize Plant R.O Plant Resin மாற்றுதல், filter tank –களில் ஏற்படும் கசிவு போன்ற Major breakdown/Full Service work / Plant complete painting work .செய்யும்பொழுது தேவையான உதிரிபாகங்கள் மற்றும் Labour charge யூனியன்மூலம் உரிய வழிமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்படும்.

13. Water Plant –ல் அவ்வப்போது ஏற்படும் பழுதுகள் ஒன்றிய பொறியாளர் மற்றும் மேல் அதிகாரிகளிடம் தெரிவித்து உடனுக்குடன் பழுது நீக்கிட தேவையான அனைத்து பணிகளை செய்ய வேண்டும்.

14. Water Plant மற்றும் Water Plant சுற்றுபுறம் கீழ்நிலைத்தொட்டி, மேல்நிலைத்தொட்டிகளை சுத்தமாகவும் மற்றும் தண்ணீர் பிரிவை சுற்றியுள்ள அனைத்து பகுதிகளையும் சுத்தமாகவும் பசுமை பகுதியாகவும் மாற்றி பராமரித்து வர வேண்டும்.

15. குறைவாக தண்ணீர் பயன்பாட்டிற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து பராமரித்து வரவேண்டும்.

16. Water பிரிவில் படியும் உப்புப் படிவங்களை உடனுக்குடன் தூய்மை செய்து வெளியேற்றுதல் வேண்டும்.

டெண்டர்தாரர் கையொப்பம்

17. கீழ்நிலைத்தொட்டி, மேல்நிலைத்தொட்டி, Softner Plant, Demineralizer Plant, R.O Plant மற்றும் அனைத்து பிரிவுகளுக்கும், செல்லும் தண்ணீர் குழாய்கள் (Pipe Line –கள்), Water meter மற்றும் திறப்பான்கள் அனைத்தும் கசிவு மற்றும் துருபிடித்தல் இல்லாமல் பராமரித்து வர வேண்டும்.

18. தண்ணீர் பிரிவில் உள்ள Water receipt and usage register மற்றும் log book களில் அன்றாட வேலைகளை ஒவ்வொரு shift –லும் தவறாமல் பதிவு செய்து பிரிவு அதிகாரி மற்றும் மேல் அதிகாரிகளின் பரிசீலனைக்கு தினமும் சமர்ப்பிக்க வேண்டும்.

19. இரண்டு Softner Plant-களில் ஒன்றை இயக்கத்திலும் மற்றொன்றை Regeneration / Back wash செய்து இயக்குவதற்கு தயார் நிலையிலும் பராமரித்து வைத்து இருக்க வேண்டும்.

20. ஒப்பந்ததாரர் மாதம் ஒரு முறை தங்களது நிறுவனத்திலிருந்து பொறியாளர் ஒருவரை அனுப்பி தண்ணீர் பிரிவின் இயக்கம் மற்றும் தண்ணீரின் தரத்தினை (Treated water) பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும்.

21. தண்ணீர் பிரிவில் பணிபுரியும் ஒப்பந்த பணியாளர்கள் பிரிவு அதிகாரிகள் மற்றும் மேல் அதிகாரிகள் தெரிவிக்கும் வண்ணம் தண்ணீர் பிரிவு சம்மந்தமான பணிகளை காலதாமதமின்றி செய்து முடித்து தண்ணீர் சுத்திகரிப்பு மற்றும் அனைத்து பிரிவுகளுக்கும் தண்ணீர் விநியோகம் எந்தவித தொய்வுமின்றி மேற்கொள்ள வேண்டும்.

இடம் – டெண்டர்தாரர் கையொப்பம்
நாள் –

பொது மேலாளர்

சேலம் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள்ஒன்றியம் லிட்., **ED 912**
சேலம் – **636 302.**

சேலம் பால்பண்ணையில் தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்தின் இயக்கம், பாரமரிப்பு மற்றும் தண்ணீர் விநியோகம் இரண்டு வருட காலத்திற்கு செய்வதற்கான ஒப்பந்தப் பணிகள்

பகுதி – ‘‘அ‘‘

**(தொழில் நுட்ப விபர பகுதி / Technical Bids)**

| | | |
|---|---|---|
| 01) | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி<br><br>PAN NO.<br>AADHAR NO. | |
| | **அ)** தொலைபேசி எண் | |
| | **ஆ)** கைபேசி எண் | |
| | **இ)** தொலைநகல் எண் | |
| | **ஈ)** E-mail I.D. | |
| 02) | நிறுவனத்தின் உரிமையாளர் பெயர் மற்றும் முகவரி | |
| | **அ)** தொலைபேசி எண் | |
| | **ஆ)** கைபேசி எண் | |
| 03) | **அ)** தொழிற்சாலைகளின் சட்ட திட்டங்களின்படி டெண்டர்தாரர் தங்கள் நிறுவனத்தை பதிவு செய்துள்ளதா **?** | |
| | **ஆ)** ஆம், எனில் அதற்கான சான்றிதழ் நகல் இணைக்கப்பட்டுள்ளதா **?** | |
| 04) | **அ)** தொழிற்சாலைகளின் சட்ட திட்டங்களின்படி டெண்டர்தாரர் பதிவு செய்யப்பட்ட உரிமம் பெறப்பட்டுள்ளதா **?**<br>**ஆ) இருப்பின்** விபரம்<br>**இ) இல்லையெனில்,**<br>டெண்டர்தாரர் டெண்டர் கிடைக்கப் பெற்ற **30 நாட்களுக்குள்** தொழிற்சாலைகளின் சட்ட திட்டங்களின்படி டெண்டர்தாரர் பதிவு செய்யப்பட்ட **உரிமத்தைப்** பெற்று அதன் நகலை நிர்வாகத்திற்கு தெரிவிக்க உத்திரவாதம் அளிக்குமா **?.** | |

டெண்டர்தாரர் கையொப்பம்

| | | |
|---|---|---|
| 05) | **அ)** ஒப்பந்ததாரர் குறைந்தபட்சம் பத்து எண்ணிக்கையில் Softner Plant மற்றும் Demineralizer Plant நிறுவி உள்ளாரா?<br><br>**ஆ)** ஆம் எனில், அதற்கான சான்றிதழ் நகல் இணைக்கப்பட்டுள்ளதா **?** | |
| 06) | **அ)** ஒப்பந்ததாரருக்கு இவ்வொப்பந்த பணிகளுக்கு நிகரான ஒப்பந்தப் பணிகளை கையாளும் விசயத்தில் குறைந்தது **ஐந்து ஆண்டுகள்** முன் அனுபவம் உள்ளதா **?**<br><br>**ஆ)** ஆம் எனில், அதற்கான சான்றிதழ் நகல் இணைக்கப்பட்டுள்ளதா **?** | |
| 07) | **அ)** தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி கணக்கு உள்ளதா **?** | |
| | **ஆ)** இருப்பின் கணக்கு எண் | |
| | **இ)** கடைசியாக வருங்கால வைப்பு நிதி நிறுவனத்திற்கு செலுத்தப் பட்ட தொகை மற்றும் இரசீது எண் மற்றும் நாள் (நகல் இணைக்கப்பட வேண்டுமு) | |
| 08) | **அ)** தொழிலாளர் மாநில ஈட்டுறுதி கழக மருத்துவ வசதி பெற்றுள்ளதா **?** இருப்பின் கணக்கு எண் விபரம் | |
| | **ஆ)** கடைசியாக செலுத்தப்பட்ட சந்தா விபரம் | |
| 09) | **அ)** சரக்கு மற்றும் சேவை வரி **(GST)** கணக்கு உள்ளதா **?** | |
| | **ஆ)** இருப்பின் கணக்கு எண் | |
| | **இ)** கடைசியாக சரக்கு மற்றும் சேவை வரி **(GST)** செலுத்தப் பட்ட தொகை மற்றும் இரசீது எண் மற்றும் நாள் (நகல் இணைக்கப்பட வேண்டும்). | |
| 10) | **அ)** வருமான வரி கணக்கு எண் | |
| | **ஆ)** வருமான வரி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வருமான வரி படிவங்களில் கடைசியாக செலுத்திய நகல் இணைக்கப்பட வேண்டும். | |

டெண்டர்தாரர் கையொப்பம்

| | | |
|---|---|---|
| 11) | தங்கள் நிறுவனம் சேலம் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு சொந்தமான சொத்துக்களுக்கு / பொருட்களுக்கு ஏற்படும் இழப்பு / திருட்டு போன்றவைகளுக்கு ஈடு செய்ய / திரும்ப செலுத்த உத்திரவாதம் அளிக்குமா ? | |
| 12) | **அ)** "டேவணித் தொகை" (EMD) இணைக்கப் பட்டுள்ளதா **?**<br>ஆம் எனில் | ரூ. 40,000/- |
| | i) வரைவோலை (DD) எண் | – |
| | ii) வரைவோலை நாள் | – |
| | iii) வங்கியின் பெயர் | – |
| | **ஆ)** "டேவணித் தொகை" (EMD) செலுத்துவதிலிருந்து **விலக்குக்** கோரப்பட்டுள்ளதா **?**<br>ஆம் எனில், அதற்காக இணைக்கப்பட்டுள்ள சான்று நகல்களின் விபரம் | |
| 13) | தங்களது நிறுவனத்தை தகுதியற்ற நிறுவனமாக இவ்வென்றியத்தாலோ அல்லது வேறு நிறுவனத்தாலோ அறிவிக்கப் பட்டுள்ளதா ?<br><br>ஆம் எனில், விபரம் | |

மேலே அளிக்கப்பட்ட அனைத்து விவரங்களும் சரியானவை என்று சான்று அளிக்கிறேன்.

இடம் –

நாள் –

டெண்டர்தாரர் கையொப்பம்

பொது மேலாளர்

# ஆவின்

<u>சேலம் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள்</u>
<u>ஒன்றியம் லிட், தளவாய்ப்பட்டி அஞ்சல்,</u>
<u>சேலம் – 636 302.</u>

## <u>ஒப்பந்தப் பணி படிவம்</u>

<u>விலை விபர படிவம் "ஆ"</u>

சேலம் பால்பண்ணையில் உள்ள தண்ணீர் சுத்தகரிப்பு நிலையத்தின் இயக்கம், பாரமரிப்பு மற்றும் தண்ணீர் விநியோகம் செய்வதற்கான பணிகளை இரண்டு வருடத்திற்கு மேற்கொள்வதற்கான ஒப்பந்தப் பணி.

## <u>ஒப்பந்த நாள்</u>

## 12–07–2022

சேலம் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள்ஒன்றியம் லிட்., ஈடி 912
சேலம் – 636 302.

## பகுதி – "ஆ" (விலை விபர பகுதி / **Commercial Bid)**

நிறுவனத்தின் பெயர் /
ஒப்பந்ததாரரின் பெயர் –

ஒப்பந்ததாரின் விலாசம் –

ஒப்பந்ததாரரின் தொலை /
கைபேசி எண் –

**சேலம் பால்பண்ணையில் தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்தின் இயக்கம், பராமரிப்பு மற்றும் தண்ணீர் விநியோகம் இரண்டு வருட காலத்திற்கு செய்வதற்கான ஒப்பந்தப் பணிகளுக்கு**

## கூலி விபரம்.

| வ. எண். | ஒப்பந்தப் பணிகளின் விபரம் | | கூலி விபரம் (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 01) | சேலம் பால்பண்ணையில் தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்தின் இயக்கம், பராமரிப்பு மற்றும் தண்ணீர் விநியோகம் இரண்டு வருட காலத்திற்கு செய்வதற்கான ஒப்பந்தப் பணிகளை மேற்கொள்ள நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள எண்ணிக்கையின்படி பணியாளர்களை பணியமர்த்த **அடிப்படைகூலி** (எண்ணால்) | | ரூ . |
| 02) | (+) E.P.F. @ 13% | | ரூ . |
| 03) | (+) E.S.I..@ 3,25% | | ரூ . |
| 04) | (+) நிர்வாக கட்டணம் | | ரூ . |
| 05) | **Sub Total** | | ரூ . |
| 06) | (+) G.S.T. @ 18% | | ரூ . |
| **07)** | **Net Total**<br>(ரூபாய்…………………………………………………………………<br><br>……………………………………………………………….மட்டும்) | | ரூ . |

<u>குறிப்பு 1.</u> அரசுக்கு செலுத்த வேண்டிய அனைத்து வரிகளையும் மற்றும் சட்ட பூர்வமான இதர தொகைகளையும் ஒப்பந்ததாரரே **தனது** சொந்த பொறுப்பில் செலுத்தி சம்மந்தப்பட்ட பதிவேடுகளை பராமரித்து வரவேண்டும்.

2. அரசு ஆணையின்படி ஏதாவது மாற்றம் ஏற்படின், அதற்கேற்ப ஊதியத்தை கணக்கிட்டு அதற்கான ஊதியம், E.P.F மற்றும் ESI ஆகியவைகளை ஒப்பந்தப் பணியாளர்களுக்கு செலுத்தபடவேண்டும்.

3. விலை விபர பகுதியில் தாங்கள் கோரும் விலையை எண்ணாலும், எழுத்தாலும் பிழையில்லாமல் குறிப்பிட வேண்டும். எண்ணால் மற்றும் எழுத்தால் பிழையிருக்கும்பட்சத்தில் எது குறைவோ அதுவே தாங்கள் குறிப்பிட்ட விலையாக ஏற்றுக்கொள்ளப்படும்.

இடம் :

நாள் : டெண்டர்தாரர் கையொப்பம்

பொது மேலாளர்